2020 பிப்ரவரி 17]

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தில் 20,000 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், 7,000 பொது மக்கள் வாழ்கிறார்கள். அந்த இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

இ–சேவை மையம்

***26157—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மா இ–சேவை மையங்களை வட்டாட்சியர் அலுவலகங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டுமல்லாது கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களிலும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 120 கோடி மக்கள் வாழ்கின்ற இந்திய தேசத்திலே, நல்லாட்சி நடத்துகிற நாடு, அன்னைத் தமிழ்நாடு என்கிற ஒரு வரலாற்றுப் பெருமையைப் பெற்றுத் தந்து, 'மூன்று நாட்கள் நிலைக்காது' என்று கூறப்பட்ட அந்த வியூகத்தைத் தகர்த்தெறிந்து, மூன்று ஆண்டுகள் மட்டுமல்ல, இதே இடத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'நூறு ஆண்டுகள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அன்னைத் தமிழகத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்கு*

சேவையாற்றும்' என்று சொன்னதைப்போல, அந்த இலட்சியக் கனவினை நனவாக்குகின்ற வகையிலே நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற அம்மா அவர்களின் அரசைத் தலைமை தாங்குகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அவர்களுக்குத் துணை நிற்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 11–20

(அ) மற்றும் (ஆ) சேலம் தெற்குத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 23 இ–சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேவை ஏற்படுமாயின், பிற இடங்களிலும் இ–சேவை மையங்கள் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பரிசீலனை செய்யும். தற்போது கிராம நிருவாக அலுவலகங்களில் இ–சேவை மையங்கள் தொடங்குவது பற்றி அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசை நாடி மக்கள் சென்ற நிலையை மாற்றி, மக்களை நாடி அரசு என்ற சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தித் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் வழியில் மக்களைத் தேடிச் சென்று அவர்களின் குறைகளைத் தீர்க்க முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடத்தி, அதில் சுமார் 5 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு கண்டு, நான்காம் ஆண்டில் நல்லாட்சியைத் தொடரும் மக்களின் நம்பிக்கை நாயகர், அவர்களின் நலம் பேணும் தரணி போற்றும் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர், மாட்சிமை பொருந்திய அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சிக்குத் துணை நின்று, நாடு போற்றும் நிதிநிலை அறிக்கையை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், வாய்ப்பு வழங்கிய தங்களையும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், சக சட்டமன்ற உறுப்பினர்களையும் வணங்கி மகிழ்கின்றேன்.

2020 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளவும், தங்களுக்குத் தேவையான வருமானம், இருப்பிடம் மற்றும் சாதிச் சான்றிதழ்களைப் பெறவும், பட்டா பெயர் மாற்றம் உள்ளிட்ட ஆவணங்களை எளிய முறையில் உடனடியாகப் பெற்றுக்கொள்ள இதய தெய்வம் அம்மா அவர்களால் அம்மா இ–சேவை மையம் என்ற திட்டம் துவக்கப்பட்டு, மக்களுக்குப் பெரிதும் பயன்பாட்டில் உள்ளது. சான்றிதழ்கள், ஆவணங்கள் ஆகியவற்றைப் பெறுவதுடன், திருமண உதவித் திட்டம் உள்ளிட்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அரசின் பல்வேறு நலத் திட்டங்களைப் பெறுவதற்கு ஏழை எளிய மக்கள் இத்திட்டத்தினைப் பெரிதும் பயன்படுத்தி வருவதால், அம்மா இ–சேவை மையங்களை சேலம் தெற்குத் தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மட்டுமல்லாது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 25 இடங்களில் அம்மா இ–சேவை மையங்கள் செயல்பட்டு வந்தாலும், அனைவரும் எளிதாகவும், விரைவாகவும் பயன்பெறும்விதமாக, கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களிலும், இச்சேவையைத் துவக்கி வைத்து, அதற்குத் தேவையான உபகரணங்களை வழங்கி விரிவுபடுத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தர வேண்டுமாய் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்களைத் தங்கள் மூலமாகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இ–சேவை மையங்கள், அரசு அலுவலகங்களுக்குச் செல்லாமலேயே சான்றிதழ்களைப் பெறக்கூடிய வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே, நமது தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள், அதேபோல் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் கிராமத் தொழில்முனைவோர் ஆகியவற்றின் வாயிலாக இந்த இ–சேவை மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்திவேல் அவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையோடு,*

கிராம நிருவாக அலுவலகங்களில் அவற்றைத் தொடங்கினால் அவை மக்களுக்கு மேலும் பயனுள்ளதாக இருக்கும் என்கின்ற ஒரு நல்ல ஆலோசனையை வழங்கியிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வின்போது அவற்றைக் கவனத்தில் கொண்டு, நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த நிருவாகம், ஆட்சி ஆளுமைத் திறனில் தமிழகம் முதன்மை மாநிலம் என்ற நற்சான்றிதழோடு, நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு விருதுகளை தமிழகத்திற்குப் பெற்றுத் தந்து, அன்னைத் தமிழகத்தின் பெருமையையும், இதய தெய்வம் அம்மா அவர்களது அரசின் ஆட்சி அருமையையும், அகிலமெங்கும் பரவச் செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், தங்களுக்கும் என் நிறைவான நன்றியைப் பணிவாக சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் எளிதாக அரசின் நலத் திட்ட வசதிகளைப் பெற, இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு, வருவாய்த் துறை சார்பாக புதிய மாவட்டங்களையும், புதிய கோட்டங்களையும், புதிய வட்டங்களையும் உருவாக்கி வருவதில் வரலாற்றுச் சாதனை படைத்து வருகிறது. அந்தவகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ளதுபோல், ஏழை எளிய மக்கள், வயது முதிர்ந்தோர், மாற்றுத் திறனாளிகள் வரும் இடங்களான, வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களிலும் வாகனம் நிறுத்தும் வசதி, இருக்கை வசதியுடன்கூடிய நிழற்கூடம், ஆண், பெண், மாற்றுத் திறனாளிகளுக்கான கழிவறைகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகளை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்

2020 பிப்ரவரி 17]

சென்று, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையில், பொது மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

4. தகவல் கோரல்

(அ) குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப்பெறும் வகையில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுதல் மற்றும் சென்னை, வண்ணாரப்பேட்டையில் நடைபெற்றுவரும் போராட்டம் குறித்து

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை இந்த அவையில் கொண்டுவர வேண்டுமென்று உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். சென்ற கூட்டத்தொடரில் அது ஆய்வில் இருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருந்தீர்கள். இந்தக்*